## 2

# கீழ்ப்படிதலுக்கு வேதாகம ரீதியான உதாரணங்கள்

*நாம் யாவரும் தேவன் கூறுவதைக் கேட்டு அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார் (யாத்திராகமம் 19:5; உபாகமம் 11:27, 28; 13:4; 27:10; மத்தேயு 7:21; எபிரெயர் 5:9). அவர் தவறாகப் புரிந்து கொள்ளப்படாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி அவர், கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் விளைவுகளைக் காண்பிப்பதற்காக, விசுவாசமும் தேவபக்தியும் நிறைந்த ஊழியக்காரர்கள் மற்றும் கலகக்கார மக்கள் ஆகியோரின் உதாரணங்களை அவர் கொடுத்துள்ளார். பவுல், "அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 10:6). அவர் "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" என்று கூறுவதற்கு சென்றார் (1 கொரிந்தியார் 10:11).*

*பழைய ஏற்பாட்டில் காணப்படும் ஒரு சில உதாரணங்களை நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.*

### ஆபேல்

*காயீன் மற்றும் ஆபேல் ஆகியோரைக் குறிக்கையில், "கீழ்ப்படியாமை" மற்றும் "கீழ்ப்படிதல்" என்ற வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டிருப்பதில்லை, ஆனால் அவர்கள் செய்த விஷயங்கள் கீழ்ப்படியாமை மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றிற்குச் சாட்சியாக உள்ளன.*

> *எனவே காலப்போக்கில், காயீன் நிலத்தின் கனிகளைக் காணிக்கையாகக் கொண்டுவந்தார். ஆபேல் தமது பங்கிற்கு, தமது மந்தையின் தலையீற்றுக்களிலும் கொழுத்தவைகளைக் கொண்டுவந்தார். கர்த்தர் ஆபேலையும் அவரது காணிக்கையையும் அங்கீகரித்தார்; ஆனால் காயீனும் அவரது காணிக்கையும் அங்கீகரிக்கப்படவில்லை (ஆதியாகமம் 4:3-5அ).*

*ஆபேலைக் குறித்து எபிரெயருக்கு எழுதிய நிருபம் பின்வருமாறு உரைக்கிறது,*

> *விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான் (11:4).*

*ஆபேலின் கீழ்ப்படிதல் அவரது செய்கைகளில் காணப்படுகிறது. அவர் தமது மந்தையின் மிருகங்களில் தலையீற்றானவைகளையும் அதன் கொழுப்பையும் தமது பலிகளில் உள்ளடக்கினார். அவர் தேவன் மீது கொண்டிருந்த விசுவாசத்தினால் செயல்பட்டவராக, தேவன் மதிக்கத்தக்க பலியைச் செலுத்தினார். தேவன் மீதுள்ள "விசுவாசம்" என்று தேவன் எதை அர்த்தப்படுத்தினாரோ - தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு, தேவன் கட்டளையிட்டதைச் செய்தல் மூலம் பதில் செயல் செய்தல் - அதற்கு ஆபேல் ஒரு உதாரணமாக இருக்கிறார்.*

*நியாயப்பிரமாணம் தரப்படுவதற்கு முன்பு தேவனால் அங்கீகரிக்கப்பட்டதாக அறியப்படுகிற ஒரே வகையான பலியான, மிருகத்தை ஆபேல் பலியாகச் செலுத்தினார் (ஆதியாகமம் 8:20; 22:9-13; யோபு 42:7-9; யாத்திராகமம் 10:25, 26). நியாயப்பிரமாணம் தரப்பட்டபோது. இஸ்ரவேல் மக்கள் பலியில் தானியங்களைக் காணிக்கையாக அளிக்க முடியும் என்று மோசேயின் மூலமாகத் தேவன் வெளிப்படுத்தினார் (லேவியாரகமம் 2:1-16; 5:11-13; 6:14-23; 7:11-14).*

*காயீனும் ஆபேலும்* எதைப் *பலியாகச் செலுத்த முடியும் என்று அறிவதற்கு, தேவன் விரும்பியது என்ன என்பதை அவரே வெளிப்படுத்துவதே ஒரே வழியாக இருந்தது. தேவன் எதை விரும்புகிறார் என்று அறியாதிருந்தால் ஆபேல் எவ்வாறு விசுவாசத்தினால் செயல்பட்டிருக்க முடியும்? இது, "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று கூறும் ரோமர் 10:17ம் வசனத்தில் சாட்சியத்தைக் கொண்டுள்ளது. செய்யப்பட வேண்டியது என்ன என்று கூறப்பட்டபோது தேவனுடைய வார்த்தையின் மீதுள்ள விசுவாசத்தினால் செயல்பட்டதாக எபிரெயர் 11ம் அதி காரத்தில் கூறப்பட்டுள்ளவர்கள் "நாயகர்கள்" என்று அழைக்கப் பட்டுள்ளனர். இந்தப் பட்டியல் நோவா (வசனம் 7), ஆபிரகாம் (வசனங்கள் 8, 9), மோசே (வசனங்கள் 24-29) மற்றும் பிறர் (காண்க வசனங்கள் 2-40) ஆகியோரை உள்ளடக்கியிருக்கிறது.*

*காயீன் மற்றும் ஆபேல் ஆகியோருக்கு இடையிலான நேரெதிரான ஒப்பீடு, கீழ்ப்படிதலில் தேவன் எதிர்பார்ப்பது என்ன என்பதை விவரிக்கிறது. இருப்பினும் அவர்களின் வேறுபாடுகள் ஒருவர் எதிர்பார்க்குமளவுக்குப் பெரிதாக இருப்பதில்லை. அவ்விருவருமே தேவன்மீது விசுவாசம் கொண்டு இருந்தனர், தாங்கள் ஆராதிக்க வேண்டும் என்று நம்பினர், தேவனை ஆராதிக்க நாடினர், ஒரு பலியை செலுத்த வேண்டும் என்று அறிந்திருந்தனர் மற்றும் ஒரு பலியைச் செலுத்தினர்.*

*அவர்கள் ஒரே ஒரு அம்சத்தில் மாத்திரம் வேறுபட்டிருந்தனர். ஆபேல் தேவன் விரும்பிய வகையிலான பலியைச் செலுத்தினார், அதேவேளையில் காயீன் தேவன் மதிக்கும் பலியைச் செலுத்தத் தவறினார். தேவன்* ஆராதனையை *மாத்திரமல்ல, ஆனால் அது அவர்* தேர்ந்து கொண்டபடி *ஏறெடுக்கப்பட வேண்டும்* என்பதையும் *விரும்பினார்.*

*தேவன் அங்கீகரித்துள்ளதன்படி மாத்திரம் ஒரு நபர் ஆராதிக்கும்போது, அவர் நீதியானதைச் செய்கிறாரா? ஒருவர் தமது ஆராதனையை தேவன் வெளிப்படுத்தியுள்ளவற்றுடன் மட்டுப்படுத்தாது இருக்கையில், அவர் பாவம் செய்து துன்மார்க்கமானதைச் செய்கிறாரா? காயீனின் பலியைத் தேவன் மறுத்த*

பின்பு, காயீனிடத்தில் அவர், "நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய்" என்று கூறினார் (ஆதியாகமம் 4:7; KJV) காயீன் தமது பலியின் மூலம் நன்கு செயல்படவில்லை, எனவே அவர் பாவம் செய்தார்.

காயீன் ஆபேலைக் கொலை செய்ததற்கான காரணத்தை, அப்போஸ்தலரான யோவான் கொடுத்தார்: "தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே" (1 யோவான் 3:12). ஆபேலின் நீதியானது தேவன் விரும்பிய பலியைச் செலுத்துதலில் நன்கு செய்யப்பட்டு இருந்த வேளையில், தேவன் தேர்ந்து கொண்டிராததைத் தான் (காயீன்) பலியாகச் செலுத்திய காரணத்தால் தனது சொந்த செய்கைகள் "பொல்லாதவைகளாக" இருந்தன என்பதைக் காயீன் கண்டார். ஆராதனையில் தேவன் விரும்புகிறவற்றில் இருந்து நாம் மாறுபட்டால், நாம் நமது சொந்தத் தூண்டுதலின்படி செயல்பட்டுள்ளதாலும் தேவனுடைய சித்தத்தின்படி செயல்படாததாலும், பாவம் செய்கிறோம்.

காயீனின் எண்ணப்போக்கு மாத்திரம் கீழ்ப்படியாமைக்கு வேதாகம ரீதியான உதாரணங்களில் ஒன்றாக இருந்தது என்பதே பிரச்சனையாக உள்ளது என்று சிலர் முடிவுசெய்துள்ளனர். ஒருவேளை அவர் தவறான எண்ணப்போக்கைக் கொண்டிருந்திருக்க வேண்டும்; இருப்பினும் அவரும் அவரது பலியும் தேவனால் புறக்கணிக்கப் பட்டிருந்தன (ஆதியாகமம் 4:5).

ஆபேல் மரித்திருந்தாலும், *கீழ்ப்படிதல்* உள்ள விசுவாசத்தின் உதாரணமாக அவர் இன்னமும் நமக்கு ஒரு செய்தியை உரைக்கிறார் (எபிரெயர் 11:4)

## நோவா

நோவாவைக் குறித்து, "கீழ்ப்படிதல்" என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டிருப்பதில்லை, ஆனால் அவர் "செய்தார்" என்பது அவர் கீழ்ப்படிந்தார் என்பதற்கு ஆதாரமாக உள்ளது. "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத் தேவஎச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்" என்று வேதவசனங்கள் கூறுகின்றன (எபிரெயர் 11:7அ). மேலும் நாம், "நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்" என்றும் வாசிக்கிறோம் (ஆதியாகமம் 6:22).

நோவா, "கீழ்ப்படிதலுக்குக் குறிப்பிடத்தக்க வகையிலான உதாரணமாக இருக்கிறார். அவர் தேவனுடைய வெளிப்படுத்துதல் இல்லாமலேயே பேழையைக் கட்ட *அறிந்திருக்க* முடியாது. எனவே தேவன் பேழையைக் கட்டுதல் குறித்து அவருக்குத் திட்டவட்டமான தகவல்களைக் கொடுத்தார். நோவா, தாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை மிகச்சரியாகப் புரிந்து கொண்டிருந்தார், அவர் தமது சொந்தத் திட்டத்தையல்ல ஆனால் தேவனுடைய திட்டத்தையே கவனத்துடன் சார்ந்திருந்து, தேவன் கேட்டுக்கொண்டபடியே (பேழையைக் கட்டுவதற்கான) பொருட்களைப் பயன்படுத்தினார். வெள்ளப் பெருக்கு வரும் என்று நோவா *அறிந்திருக்க* முடியாது; வரவிருந்த வெள்ளப் பெருக்கு பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தத்தைச் சார்ந்திருந்து விசுவாசத்தினால் செயல்பட வேண்டியிருந்தது.

*நோவா, "தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்" என்ற கூற்றானது (ஆதியாகமம் 6:22), பின்வரும் விஷயங்களில் தேவனுடைய அறிவுறுத்துதல்களை மிகச்சரியாக அவர் பின்பற்றினார் என்று அர்த்தப்படுகிறது (ஆதியாகமம் 6:14-16):*

- *கொப்பேர் மரத்தைப் பயன்படுத்துதல்.*
- *அறைகளை உண்டுபண்ணுதல்.*
- *உள்ளும் புறமும் கீல் பூசுதல்.*
- *முந்நூறு முழ (சுமார் 450 அடிகள்) நீளமாகப் பேழையைக் கட்டுதல்.*
- *அதை ஐம்பது முழ (சுமார் 75 அடிகள்) அகலமாகச் செய்தல்.*
- *அதை 30 முழ (சுமார் 45 அடிகள்) உயரமாகச் செய்தல்.*
- *மேல்தட்டுக்கு ஒரு முழத் தாழ்த்தியிலே ஒரு ஜன்னலை உண்டுபண்ணுதல்.*
- *ஒரு கதவை பேழையின் பக்கத்திலே வைத்தல்.*

*இவற்றுடன் கூட, தேவனுடைய அறிவுறுத்துதலுக்குக் கீழ்ப்படியும் வகையில், நோவா தமது மனைவி, தமது மகன்கள் அவர்களின் மனைவிகள், உணவு, மிருகங்கள் (சரியான எண்ணிக்கையில் சுத்தமான மற்றும் அசுத்தமானவை), மற்றும் உயிருள்ள எல்லாவற்றையும் பேழைக்குள் கொண்டு சென்றனர். அவர் செய்யும்படி தேவன் கூறியவற்றை - அதற்கு அதிகமாகவோ அல்லது அதற்குக் குறைவாகவோ இன்றி - மிகச்சரியாகக் செய்த காரணத்தினால், அவர் நமக்கு ஒரு நல்ல உதாரணமாக இருக்கிறார்.*

## ஆபிரகாம்

*ஆபிரகாமைக் குறித்து, அவர் கீழ்ப்படிந்தார் என்பது அறிக்கையாக உள்ளது. வேதவசனம், "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்" என்று பதிவு செய்துள்ளது (எபிரெயர் 11:8).*

*ஆபிரகாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதை ஏற்றுக்கொண்டு, தமது சொந்த நாட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றதன் மூலம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது, அவர் தமது சொந்த நாடு மற்றும் உறவினர்களை விட்டுப் பிரிந்து அறியாத தொலைதூர நாட்டிற்குச் செல்லுதல் என்று அர்த்தப்படுத்தியபோதும் அவர் அதைச் செய்தார்.*

*ஆபிரகாம் சொந்தத்தில் செலுத்திய விலை மற்றும் இழப்பு ஆகியவற்றினூடேயும்கூட, எங்கு செல்வது என்று அறியாதிருந்தார், ஆனால் ஏன் செல்கிறார் என்பதை அறிந்திருந்தார் - எனவே அவர் தம்மை ஒரு பெரிய மக்களினமாக்குவதாக மற்றும் தம்மூலமாகப் பூமியில் உள்ள எல்லாக் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதாகத் தேவன் கொடுத்திருந்த வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. அவர் செல்லுகையில், தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றினார், தாம் எங்கு செல்வது என்பதைத் தேவனிடத்தில் இருந்து அறிந்து கொண்டார்.*

*யாக்கோபு, ஆபிரகாமை ஒரு உதாரணமாகக் கொடுத்தார்: "நம்முடைய*

*பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலீபீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே" (யாக்கோபு 2:21, 22). ஆபிரகாம் தமது விசுவாசத்தினால், தமது மகன் ஈசாக்கைப் பலியிட மனதாயிருந்தார் (எபிரெயர் 11:17). அவர் தமது விசுவாசத்தினால் பின்வரும் செயல்களைச் செய்தார்:*

- *அவர் செயல்பட்டார் (ஆதியாகமம் 22:3).*
- *தேவன் கட்டளையிட்டபடி அவர் இஸ்மவேலை அல்ல, ஆனால் ஈசாக்கை அழைத்துச் சென்றார் (ஆதியாகமம் 22:2, 3).*
- *அவர் மோரியா மலைக்குச் சென்றார் (ஆதியாகமம் 22:2).*
- *அவர் அந்த மலையின்மீது தேவன் தேர்ந்துகொண்டிருந்த இடத்திற்குச் சென்றார் (ஆதியாகமம் 22:2, 4).*
- *அவர் தகனபலிக்கான விறகை எடுத்துச் சென்றார் (ஆதியாகமம் 22:2, 3).*
- *அவர் நெருப்பை எடுத்துச் சென்றார் (ஆதியாகமம் 22:6).*
- *அவர் பலிசெலுத்தக் கத்தியை எடுத்துச் சென்றார் (ஆதியாகமம் 22:6).*
- *அவர் பலிசெலுத்த ஆட்டை எடுத்துச் செல்லவில்லை (ஆதியாகமம் 22:7).*
- *அவர் பலிசெலுத்த மேடை ஒன்றைக் கட்டினார் (ஆதியாகமம் 22:9).*
- *அவர் தேவனுடைய கட்டளையைப் பின்பற்றி, பலிமேடையின்மீது விறகுகளை அடுக்கி, ஈசாக்கைக் கட்டி, பலிமேடையின் மீதிருந்த விறகுகளின்மேல் கிடத்தினார் (ஆதியாகமம் 22:9).*
- *அவர் ஈசாக்கைக் கொன்று பலியிடுவதற்குத் தமது கையை உயர்த்தினார் (ஆதியாகமம் 22:10).*

*ஆபிரகாமின் சந்ததி [கிறிஸ்து; கலாத்தியர் 3:16] மூலமாகப் பூமியில் உள்ள எல்லாக் குடும்பங்களையும் தேவன் ஆசீர்வதிக்கப் போவது ஏன் என்பதைக் கர்த்தருடைய தூதர் ஆபிரகாமுக்குக் கூறினார்: "நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால்" (ஆதியாகமம் 22:18அ). தேவன் ஆபிரகாமிடத்தில் கேட்டுக்கொண்டபடியெல்லாம் ஆபிரகாம் செய்தார். தேவனுடைய கட்டளைகளில் திட்டவட்டமான கேட்புகளும் மறைகருத்துக்களும் அடங்கியிருந்தன. தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய, உரைக்கப்பட்ட விஷயங்களை ஆபிரகாம் மிகச்சரியாகச் செய்ய வேண்டியிருந்தது:*

- *பலிக்கான ஒரு உயிர் - ஈசாக்கு (ஆதியாகமம் 22:2).*
- *பலிசெலுத்த ஒரு இடம் அல்லது ஒரு குறிப்பிட்ட இடம் - மோரியா மலை (ஆதியாகமம் 22:2).*
- *பலிசெலுத்த ஒரு நபர் - ஆபிரகாம் (ஆதியாகமம் 22:2).*
- *தகனபலியைச் செலுத்துதல் - மற்றும் பலிசெலுத்த மனவிருப்பம்.*

*தேவன் உரைக்காதிருந்தும், அவரது கட்டளையை நிறைவேற்ற*

மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்ட சில விஷயங்களையும் அவர் செய்வது அவசியமாக இருந்தது:

- செல்வதற்கான வழிவகை - நடத்தல் அல்லது கழுதையின்மீதேறிச் செல்லுதல் (ஆதியாகமம் 22:3).
- நெருப்புக்கு விறகு (ஆதியாகமம் 22:3).
- பலிசெலுத்த விறகைப் பற்ற வைப்பதற்கு நெருப்பு (ஆதியாகமம் 22:6).
- பலியைக் கொல்ல ஒரு கத்தி அல்லது வேறு ஏதாவது (ஆதியாகமம் 22:6).
- பலிசெலுத்தப்படவிருந்த உயிரின் மனவிருப்பம்.

தேவன் கேட்கிற விஷயங்களின் எல்லாக் கருத்துக்களையும் நாம் புரிந்துகொள்ளாதிருந்தாலும், அவர் கேட்கிறவற்றின்படி தேவனுக்கு நாம் விசுவாசத்தினால் எவ்வாறு கீழ்ப்படிய வேண்டும் என்பதற்கு ஆபிரகாம் ஒரு உதாரணமாக இருக்கிறார்.

## எரிகோவில் யோசுவா

இஸ்ரவேலின் வரலாற்றில் பிற்பாடு, யோசுவா எரிகோ நகரத்தை எவ்வாறு வெற்றிகொள்ள வேண்டும் என்பதற்கு, அவருக்குத் தேவன் அறிவுறுத்துதல் களைக் கொடுத்தார் (யோசுவா 6:3-5). யுத்தம் செய்யும் மனிதர்கள் ஒரு நாளுக்கு ஒருமுறை வீதம் ஆறு நாட்களுக்கு நகரத்தைச் சுற்றி அணிவகுத்துச் செல்ல வேண்டியிருந்தது (வசனம் 3). ஏழு ஆசாரியர்கள் ஏழு எக்காளங்களைப் பேழைக்கு முன்பாகச் சுமந்து சென்று, அவர்கள் அணிவகுத்துச் செல்லுகையில் எக்காளங்களை ஊத வேண்டியிருந்தது (வசனம் 4). ஏழாம் நாளில் எல்லா மனிதர்களும் நகரத்தை ஏழு முறை சுற்றி அணிவகுத்துச் செல்ல வேண்டி இருந்தது (வசனம் 4). கடைசிமுறையாக நகரத்தைச் சுற்றி வந்த பின்னர், எக்காளம் ஊதப்படுகையில் போர்வீரர்கள் உரத்து சத்தம் இட வேண்டியிருந்தது. பின்பு சுவர்கள் இடிந்து விழும் என்று தேவன் கூறினார் (வசனம் 5).

யோசுவாவும் மக்களும், தேவன் மீது விசுவாசம் வைத்துத் தாங்கள் செய்யும்படி அவர் கூறியதை மாத்திரம் செய்தனர் (யோசுவா 6:8-20). “விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது” (எபிரெயர் 11:30). அவர்கள் தேவன்மீது விசுவாசம் வைத்தனர், மற்றும் அந்த விசுவாசம் தேவனுக்குக் கீழ்ப்படியும்படி அவர்களைத் தூண்டியது. தேவனுடைய திட்டம் செயல்விளைவு உடையதாக இருக்குமா என்பதை *அறிய* அவர்கள் வகையெதையும் கொண்டிருந்தது இல்லை. அவர்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்று, அதை விசுவாசித்து, அதன்படி செயல்பட்டனர்.

## ராகாப்

இஸ்ரவேலின் வேவுகாரர்கள் எரிகோ நகரில் இருந்து தப்பிக்க ராகாப் என்பவர் உதவி செய்தாள். அதற்குப் பதிலாக அவள், நகரம் அழிக்கப்படும்போது, தானும் தனது குடும்பமும் காக்கப் படவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தாள். அவள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தால், காக்கப்படுவாள் என்று வேவுகாரர்கள் கூறினர் (யோசுவா 2:17-20). அவள் சிவப்பு நூல் கயிற்றை, அந்த

*வேவுகாரர்களை இறக்கிவிட்ட ஜன்னலிலே கட்டிவைத்து, தனது உறவினர்களை அந்த வீட்டிலே கொண்டுவந்து வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டாள். ஆனால் அவள் இந்தத் திட்டத்தை ஒருவருக்கும் வெளிப்படுத்தக் கூடாது.*

*அவள் தனக்கு அறிவுறுத்தப்பட்டபடி செய்ததால், எரிகோ நகரில் இருந்த மற்றவர்கள் அழிக்கப்பட்டபோது, அவளும் அவள் குடும்பத்தாரும் காக்கப்பட்டனர் (யோசுவா 6:22, 23).*

## *பார்வையற்ற ஒரு மனிதர்*

*யோவான் 9:1ல் காணப்படுகிற, பிறவிலேயே பார்வையற்று இருந்த ஒரு மனிதர் கீழ்ப்படிதலுக்கு இன்னொரு உதாரணமாக இருக்கிறார். இந்த மனிதரை இயேசு கண்டபோது, அவர் தரையிலே உமிழ்ந்து சேறுண்டாக்கி, அதை அம்மனிதரின் கண்களில் பூசினார். பின்பு அவரிடத்தில் இயேசு "நீ போய், ஸீலோவாம் குளத்திலே கழுவு என்றார். ஸீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான்" (யோவான் 9:7).*

*இந்த நிகழ்ச்சியில் கீழ்ப்படிதல் என்பது, இயேசுவின் அறிவுறுத்துதலைப் பின்பற்றுதல் என்று அர்த்தப்பட்டது. பார்வையற்ற மனிதர், இயேசுவின் வார்த்தைகளில் விசுவாசம் கொண்டு அவற்றிற்குக் கீழ்ப்படிந்தார். அவர், தாம் எங்கு செல்ல வேண்டும் என்பதையும், அங்கு சென்றபின், தாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும், தாம் ஏன் கழுவ வேண்டும் என்பதையும் அறிந்திருந்தார். அவர் கீழ்ப்படிந்து தமது பார்வையைப் பெற்றுக்கொண்டார்.*

*இயேசு "உன் முகத்தில் இருந்து இந்தச் சேற்றை உன் கையினால் துடைத்துப் பின்பு கழுவக்கூடாது" என்றோ அல்லது "நீ கழுவும்போது சோப்பைப் பயன்படுத்தக் கூடாது" என்றோ கூறி இந்த அறிவுறுத்துதலைக்* கொடுக்கவில்லை. *அவர், "நீ ஸீலோவாம் குளம் தவிர வேறு எந்தக் குளத்திற்கும் போகக்கூடாது" என்றோ அல்லது "சேற்றைக் கழுவ நீ வேறு யாரையும் பயன்படுத்தக் கூடாது" என்றோ திட்டவட்டமாகக் கூறவில்லை.*

*அம்மனிதர் செய்ய வேண்டியது என்ன என்பதை மாத்திரம் இயேசு அவருக்குக் கூறினார்; அவர் எவற்றைச்* செய்யக்கூடாது *என்று இயேசு அவரிடத்தில் கூறவில்லை. இதே விஷயம் தேவனுக்கான நமது ஆராதனையைப் பொறுத்தமட்டிலும்கூட உண்மையாக உள்ளது. இவ்வாறாக அவர், தாம் விரும்புவது என்ன என்பதை வெளிப்படுத்தி, செயல்பாட்டின் சாத்தியக்கூறான மற்ற விஷயங்கள் யாவற்றையும் எடுத்துரைக்கும் தேவையைக் குறைத்துள்ளார். தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது அவர் கூறுவதைச் செய்தல் என்பதாக இருக்கிறது. வேறுவிதமாகச் செய்தல் என்பது தேவனுடைய அதிகாரத்துவம் இன்றிச் செயல்படுவதாக உள்ளது.*

## *கீழ்ப்படியாமையின் விளைவுகள்*

*வேதாகமம், கீழ்ப்படியாமைக்கான உதாரணங்களையும் நமக்குத் தருகிறது. அது கடுமையான விளைவுகளைக் கொண்டுள்ளதை நாம் காணுகிறோம். சவுல் அரசர் கீழ்ப்படியாமையின் பரிதாபமான ஒரு உதாரணமாக இருக்கிறார்.*

*சவுல் அரசரின் இரண்டு மீறுதல்கள் வேதவசனங்களில் பதிவு*

*செய்யப்பட்டுள்ளன. முதலாவது, அவர் ஒரு ஆசாரியர் மாத்திரமே செலுத்த வேண்டிய பலியைச் செலுத்தினார் என்று நமக்குக் கூறப்படுகிறது. சாமுவேலுக்காக சவுல் ஏழு நாட்கள் காத்திருந்தார், ஆனால் அவரிடத்தில் வருவதில் அந்தத் தீர்க்கதரிசி நேரம் காப்பவராக இருக்கவில்லை. சவுலின் படை சிதறத் தொடங்கியபோது அவர், செயல்பாட்டின் தர்க்கரீதியான ஓட்டத்தை மேற்கொண்டவராகக் காணப்பட்டார்: அவர் கர்த்தருக்கு ஒரு பலியை ஏறெடுத்தார். இருப்பினும், அவர் ஆசாரியராக இராதபடியால், அந்தப் பலியைச் செலுத்த அவர் உரிமை இல்லாதவராக இருந்தார். அவர் பலிசெலுத்தி முடிந்த உடனே, சாமுவேல் அங்கு வந்து, "புத்தியீனமாய்ச் செய்தீர்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர் ..." என்று சவுலிடம் கூறினார் (1 சாமுவேல் 13:13).*

*இந்த முதல் பாவம், ஒரு ஆசாரியரின் அதிகாரத்துவத்தையும் நிலைப்பாட்டையும் எடுத்துக்கொள்வதாக இருந்தது. பலிகளைச் செலுத்தும் ஆசாரியர்கள் ஆரோனின் சந்ததியார்களாக இருக்க வேண்டி இருந்தது (யாத்திராகமம் 28:1, 4; 29:44; 30:30; லேவியராகமம் 1:8, 11; 2:2). பலிசெலுத்துவதற்கு லேவியர்களைத் தேவன் தெரிந்து கொண்டிருந்தபடியால், (பெஞ்சமின் கோத்திரத்தைச் சேர்ந்த) சவுல், பலிசெலுத்தும் அதிகாரம் அற்றவராக இருந்தார்.*

*சவுல், தமது செயல்கள் சரியானவையாக இருப்பதாக நினைத்தார். தேவன் கட்டளையிட்டிருந்த பலியைச் செலுத்துவதற்கான விருப்பத்தில் குறைபாடோ அல்லது தேவன்மீது விசுவாசம் கொண்டிருக்க அல்லது அவரை ஆராதிக்கத் தவறுதல் என்பதோ அவரது [சவுலின்] பிரச்சனையாக* இருக்கவில்லை. *மாறாக, சூழ்நிலைகளின் கீழ் மிகச்சிறந்தது என்று* அவர் *நினைத்தவற்றைச் செய்யத் தொடங்கியதுதான் அந்த அரசரின் தவறாக இருந்தது. அவ்வாறு செய்ததில் அவர் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமற்போனார். அவர் செலுத்திய பலி சரியானதாகவே இருந்தது, ஆனால் அவர் அந்தப் பலியைச் செலுத்த வேண்டிய நபராக இருக்கவில்லை. அவர் தேவனுடைய அனுமதியின்றிச் செயல்பட்டார்.*

*இரண்டாவது பாவமும் இதைப்போன்றே தீவிரமானதாக இருந்தது. அமலேக்கியர்கள் மீது முற்றிலுமான அழிவைக் கொண்டுவர வேண்டும் என்றும், அவர்களில் எவரையுமோ அல்லது அவர்களின் மிருகங்கள் எவற்றையுமோ உயிர்வாழ அனுமதிக்கக் கூடாது என்று அவருக்குக் கூறப்பட்டு இருந்தது. சவுலின் படை வெற்றிகரமானதாக இருந்தது; ஆனால் அவரும் அவருடன் இருந்தவர்களும், ஆகாகு என்பவரையும், ஆடுகள், காளைகள், ஆட்டுக்குட்டிகள் ஆகியவற்றில் மிகச்சிறந்தவற்றையும் நல்லவையாக இருந்த மற்ற ஒவ்வொன்றையும் தங்களிடத்தில் பாதுகாத்து வைத்துக் கொண்டனர் (1 சாமுவேல் 15:1-9). அவர் அந்த மிருகங்களைத் தேவனுக்குப் பலியிடுவதற்காகக் கொன்றுபோடத் திட்டம் போட்டிருந்தார்.*

*சாமுவேல் சவுலிடம் வந்தபோது, அவரிடத்தில் சவுல், "கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன்" என்று கூறினார். அதற்கு சாமுவேல் அவரிடத்தில், "அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும், எனக்குக் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன" என்று கேட்டார். அதற்கு சவுல், மக்கள் விரும்பியதால் அவர்கள் கர்த்தருக்குப் பலியிடுவதற்காக மிகச் சிறந்தவற்றைத் தப்புவித்து வைத்திருந்தனர் என்று பதில் அளித்தார்.*

*அதற்கு சாமுவேல் அளித்த பதிலானது, கீழ்ப்படிதல் பற்றிய தேவனுடைய எண்ணப்போக்கை வெளிப்படுத்துகிறது:*

> *கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனியப் பாவத்திற்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் (1 சாமுவேல் 15:22, 23).*

சவுலின் அறிக்கை சரியானதாக இருந்தது. அவர், "நான் கர்த்தருடைய கட்டளையையும் உம்முடைய வார்த்தைகளையும் மீறினதினாலே பாவஞ்செய்தேன்; நான் ஜனங்களுக்குப் பயந்து, அவர்கள் சொல்லைக் கேட்டேன்" என்று கூறினார் (1 சாமுவேல் 15:24). அவரது கீழ்ப்படியாமையினால், அவரது இராஜ்யம் அவரை விட்டு எடுக்கப்பட்டது (1 சாமுவேல் 28:17, 18).

செய்ய வேண்டியது என்ன என்று சவுலிடத்தில் தேவன் தெளிவாகக் கூறியிருந்தார் - மற்றும் சவுல் அதைப் புரிந்து கொண்டிருந்தார். சவுலும் மக்களும் "நல்ல" நோக்கம் கொண்டிருந்தனர் என்றே காணப்படுகிறது. அவர்கள் பலிசெலுத்தி ஆராதிக்க விரும்பினர், அதிலும் தேவன் விரும்பிய வகையில் - மந்தைகளில் மிகச்சிறந்தவற்றை - பலிசெலுத்த விருப்பம் கொண்டிருந்தனர். மாட்டுமந்தைகளில் அவர்கள் தேர்ந்து கொண்டு வைத்திருந்த எஞ்சியவற்றைப் பலிசெலுத்துவதினால் அவர்கள் அவற்றை முற்றிலுமாக அழித்துப் *போடுவார்கள்.* கொள்ளைப் பொருள்களில் மிகச்சிறந்தவற்றைத் தாங்கள் பலியிடுகையில் அவர்கள்மீது தேவன் பிரியமாக இருப்பார் என்று அவர்கள் நினைத்தனர் என்பது உறுதி. மந்தைகளில் மிகச்சிறந்தவற்றை அவர்கள் தங்கள் சொந்தப் பயன்பாட்டிற்கென்று வைத்துக் கொள்ளப் போவதில்லை. மனிதத் தர்க்கவாதத்தின்படி அவர்கள், தாங்கள் ஒரு ஞானமான முடிவை மேற்கொண்டதாக நம்பினர்.

இருப்பினும் அவர்களின் மனிதரீதியான யூகங்கள் தேவனுடைய பதில் செயலால் விரைவில் புறம்பே தள்ளப்பட்டன. இந்த நிகழ்ச்சியானது, நாம் தேவனை ஆராதிக்க நாடும்போது, சரியான முன்னுரிமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று விவரிக்கிறது. ஆராதனை முக்கியமானது என்றாலும், *கீழ்ப்படிதலே நமது முதல் அக்கறையாக இருக்க வேண்டும்.* தேவன் எதிர் பார்க்கிறபடி நாம் ஆராதிக்க வேண்டும்.